Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed · Open Access · Crossref · Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) · Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

Vol. 12 No. 04 (2026): September 2026, **p396-409** | Available online at: www.tamilmanam.in

Original Research Paper – Peer reviewed ✓

வெண்முரசில் அணிகலன் – ஓர் அடிமை விலங்கு

Ornament in Venmurasu — A Chain of Slavery

ரா. ஹேமா சிவகா,

முனைவர் பட்ட ஆய்வாளர், ப.எண். MKU24FFOL11422, தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, மதுரை – 625 001..

R. Hema Sivaka *,

Ph.D Research Scholar, Reg. No. MKU24FFOL11422, Senthamil College (Affiliated to Madurai Kamaraj University), Madurai – 625 001. Contact: 7708895752 ·
Email: hemasivakamay16@mail.com ***ORCID:*** *0009-0000-6672-0228*

முனைவர் பூ. பூங்கோதை,

ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை – 625 001.

Dr. P. Poongothai,

Research Supervisor, Assistant Professor, Tamil Higher Research Centre, Fourth Tamil Sangam, Senthamil College, Madurai – 625 001.

Article history
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:
hemasivakamay16@mail.com

Abstract:
In the tradition of Tamil literature, ornament has long been considered a symbol of a woman's beauty and wealth. This research article re-reads that assumption through Jeyamohan's novel Venmurasu. Statements regarding the ornaments of the female characters in Venmurasu have been taken as primary data. In particular, the study discusses in depth a woman's feeling of saying 'as a woman, I am bearing these ornaments,' the bitterness she feels upon seeing her decorated image in the mirror, the shudder she feels — as if touching a dead body — at the place where the ornaments touch her, the desire to change into simple clothes while being unable to do so, the burden of chastity carried in the statement 'jewellery is to show that your heart has blossomed for your husband,' and the command of authority that 'a queen must always be adorned with ornaments.'

Keywords: *Venmurasu, Ornaments, Feminism, Authority, Chain of Slavery.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய மரபில் அணிகலன் என்பது பெண்ணின் அழகு மற்றும் செல்வத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு வந்த நிலையில், ஜெயமோகன் எழுதிய வெண்முரசு நாவல் மூலம் இவ்வாய்வுக் கட்டுரை அதனை மறுவாசிப்பு செய்கிறது. வெண்முரசில் இடம்பெறும் பெண் கதாப்பாத்திரங்களின் அணிகலன்கள் குறித்த கூற்றுக்கள் முதன்மைத் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. குறிப்பாக, ‘பெண் என்று இவ்வணிகளைச் சுமந்திருக்கிறேன்’ என்று கூறும் பெண்ணின் உணர்வு, கண்ணாடியில் தன் அலங்கரிக்கப்பட்ட உருவத்தைக் கண்டு அடையும் கசப்பு, அணிகள் தீண்டும் இடத்தில் இறந்த உடலைத் தொட்டது போன்ற கூச்சத்தை உணர்தல், எளிய ஆடைக்கு மாற நினைத்தும் மாற முடியாத நிர்ப்பந்தம், ‘உன் கணவனுக்காக உன் மனம் மலர்ந்திருக்கிறது என்பதைக் காட்டவே நகை’ என்ற கற்பின் சுமை, ‘அரசி எப்போதும் அணியுடன் இருந்தாக வேண்டும்’ என்ற அதிகாரத்தின் கட்டளை ஆகியவை ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளன. இதன் முடிவாக, அணிகலன் என்பது அழகு சாதனம் அல்ல; அது பெண் என்ற பாலின அடையாளத்திற்காக அவள் உடல் மீது சமூகம், குடும்பம், அரசு ஆகிய அதிகார அமைப்புகளால் பூட்டப்படும், பொன்னாலான கண்ணுக்குத் தெரியாத அடிமை விலங்கு என்பது வெண்முரசு நாவலின் வழி நிறுவப்படுகிறது.

திறவுச் சொற்கள்: வெண்முரசு, அணிகலன், பெண்ணியம், அதிகாரம், அடிமை விலங்கு.

1. முன்னுரை

ஜெயமோகன் எழுதிய வெண்முரசு என்பது மகாபாரதத்தை மறுவாசிப்பு செய்யும் ஒரு நவீன இலக்கிய முயற்சி மட்டுமல்ல, அது உடலை, ஆடையை, அணிகலங்களை மையமாக வைத்து பெண்ணின் இருப்பை அரசியலாக விவாதிக்கும் ஒரு கலாச்சார ஆவணமும் ஆகும். சங்க இலக்கியம் தொட்டு இன்று வரையிலான தமிழ் இலக்கியங்களில் பெண்ணின் அழகு என்பது அணிகலன்களால் அளவிடப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், வெண்முரசு அந்தப் பார்வையைத் தலைகீழாக்குகிறது. இக்கட்டுரை ‘வெண்முரசில் அணிகலங்கள் அழகியலிலிருந்து அடிமை விலங்கு நோக்கி’ என்ற பொருண்மையில் அமைகிறது. இதில் அணிகலன் என்பது அழகு மட்டுமல்லாமல், பெண் என்பதற்காக அவள் மீது சுமத்தப்படும் சுமையாக, அவளை அவளுக்கே அந்நியமாக்கும் கண்ணாடியாக, இறந்த உடலின் மீது பூட்டப்படும் அலங்காரமாக, கற்பின் சாட்சியமாக, அதிகார விலங்காக எவ்வாறு உருமாறுகிறது என்பதை வெண்முரசின் பல்வேறு பெண் கதாப்பாத்திரங்களின் கூற்றின் வழியாக ஆராய்கிறது.

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

2. அணிகலங்களின் வகைப்பாடு

வெண்முரசு நாவலில் இடம்பெறும் அணிகலன்களை உடல் உறுப்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தி நோக்கும்போது, அவை ஏழு பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன (படம் 1 காண்க):

1. தலை மற்றும் கூந்தல் – தலைச்சரம், சிரமணி, சுட்டி, ஆரச்செறி, பொன்மலர் சூடிய ஐந்து சரடுப் பின்னல்.
2. காது – செங்கனல் குழை, செம்மணிக்குழை, செம்மலர்க் குழை, அல்லிவட்டம் மற்றும் புல்லிவட்டம் கொண்ட காதுமலர்.
3. மூக்கு – புல்லாக்கு, மூக்குத்தி.
4. கழுத்து மற்றும் மார்பு – செம்மணி ஆரம், சரப்பொளி, அனல்வரி, விண்மீன் வரி, பதக்க மாலை, கண்மணித்தாலி மற்றும் கருகுமணித்தாலி.
5. தோள் மற்றும் கை – நாகப்படத் தோள்வளை, கணையாழி, கல்பதித்த வளையல், நக வளை, கடகம், மோதிரம் மற்றும் கருநாக குழவிகள்.
6. இடை மற்றும் தொடை – மேகலை, தொடைச்செறி (மாலை) மற்றும் பொற்சிம்மம் கொண்ட அணிக்கச்சை.
7. கால் – பொற்சிலம்பு, மேற்பாத செறி மற்றும் முல்லை, அரளி, தெச்சி, முக்குற்றி போன்ற மலர் வடிவ மெட்டிகள்.

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

படம் 1 — வெண்முரசில் அணிகலன்களின் உடல்வழி வகைப்பாடு

தலை / கூந்தல்	தலைச்சரம், சிரமணி, சுட்டி, ஆரச்செறி, பொன்மலர் சூடிய சரடுப் பின்னல்
காது	செங்கனல் குழை, செம்மணிக்குழை, செம்மலர்க் குழை, அல்லிவட்டம், புல்லிவட்டம் கொண்ட காதுமலர்
மூக்கு	புல்லாக்கு, மூக்குத்தி
கழுத்து / மார்பு	செம்மணி ஆரம், சரப்பொளி, அனல்வரி, விண்மீன் வரி, பதக்க மாலை, தாலி
தோள் / கை	நாகப்படத் தோள்வளை, கணையாழி, கல்பதித்த வளையல், நக வளை, கடகம், மோதிரம்
இடை / தொடை	மேகலை, தொடைச்செறி (மாலை), பொற்சிம்மம் கொண்ட அணிக்கச்சை
கால்	பொற்சிலம்பு, மேற்பாத செறி, முல்லை/அரளி/தெச்சி/முக்குற்றி மலர் வடிவ மெட்டிகள்

மூலம்: ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் பெண் கதாப்பாத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் அணிகலன்களை ஆய்வாளர் தொகுத்தது.

படம் 1: வெண்முரசில் அணிகலன்களின் உடல்வழி வகைப்பாடு (ஆய்வாளர் தொகுப்பு)

மேலும், பெண்கள் அணியும் அணிகலன்களை அவற்றின் தோற்றுவாய் அடிப்படையில் நோக்கும்போது, குல அணிகலன், மங்கல அணிகலன், தனி அணிகலன் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

2.1 குல அணிகலன்

பிறப்பால் வருவது குல அணிகலன் ஆகும். ஒரு பெண் தன் விருப்பத்திற்கேற்ப இதனைத் தேர்ந்தெடுக்க முடியாது.

> *பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் ஒருவர் அணியும் அணிகலன் அவர் எந்தக் குடியைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டும் குறியீடாகவே இருந்துள்ளது. அணிகலன் என்பது குலம் வழங்கும் அடையாளம் ஆகும்.* (பரமசிவன் 88)

குருகுலப் பெண்கள் அணியும் முத்து மாலை, யாதவப் பெண்கள் அணியும் மயிற்பீலி மற்றும் குன்றிமணி மாலை, நாகர்குலப் பெண்கள் அணியும் பாம்பு வடிவ அணிகலன் என்று ஒரு பெண் எந்தக் குலம் என்பதை அவள் உடலில் அணியும் அணியே முத்திரையாகப் பார்க்கப்படுகிறது. வெண்முரசில் குருகுல அரசிகள் எப்போதும் முத்து மாலை அணிந்தவர்களாகவே

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

காட்டப்படுகிறார்கள்.

> *குருகுலத்துப் பெண்களுக்கு முத்து மாலையே குலக்குறி. பிற குலத்துப் பெண் அதை அணியலாகாது என்பது மரபு.* (ஜெயமோகன், முதற்கனல் 243)

முத்து என்பது சந்திர குலத்தின் தூய்மை மற்றும் குருகுலத்தின் அரசுரிமைக்கான அடையாளம் என்பதை வெண்முரசு காட்டுகிறது.

2.2 மங்கல அணிகலன்

சமூகம் மற்றும் கணவனால் திணிக்கப்படும் மங்கல அணிகள் தாலி, மெட்டி, குங்குமம், வளையல் ஆகும்.

> *கை வளையல் இல்லாமல், கால் மெட்டி இல்லாமல் ஒரு அரசி அரசவைக்கு வரக்கூடாது. இது நெறி.* (ஜெயமோகன், மழைப்பாடல் 198)

இது மணமான அரச பெண்கள் அனைவரும் அணியும் இன்றியமையாத அணிகலங்கள் ஆகும். அதாவது,

> *தாலி என்பது திருமணத்தின் அடையாளம் அல்ல, அது பெண் இன்னொரு குடும்பத்திற்குச் சொந்தமானவள் என்பதைக் காட்டும் உரிமைப் பத்திரம்.* (தமிழ்ச்செல்வி 94)

இதுவே அவள் கணவனுக்குக் கட்டுப்பட்டவள், கற்புடையவள் என்பதை நிரூபிக்கும் சான்றிதழ் ஆகும்.

2.3 தனி அணிகலன்

பெண் தானே தன் விருப்பத்தால் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்வது தனி அணிகலன் ஆகும். திரௌபதியின் கருநீலக் கல்மாலை யாகத்தில் பிறந்த தன் கரிய நிறத்திற்காக அவளே தேர்ந்தெடுத்தது. இதனைத் திரௌபதியின் கூற்றின் வழி காணலாம்:

> *யாகத்தில் பிறந்தவள் என்பதால் என் நிறம் கருமை. இந்தக் கருமையை மறைக்க நான் முத்துக்களை அணிய மாட்டேன். என் நிறத்தைப் போலவே இருக்கும் இந்தக் கருநீலக் கல்மாலையை நானே தேர்ந்தெடுத்தேன். இதுதான் என் தனித்துவம்.* (ஜெயமோகன், பிரயாகை 234)

என்கிறாள். அதாவது,

> *திரௌபதி தன் கரிய நிறத்தை மறைக்காமல், அதை அழகாக்க கருநீலக் கல்மாலையை தேர்ந்தெடுத்தது என்பது திணிக்கப்பட்ட அழகு இலக்கணத்தை மறுத்து தன் உடலைத் தானே வரையறுக்கும் பெண்ணிய எதிர்ப்புச் செயல்பாடு ஆகும்.* (தேவி 76)

மேலும், இராதை காட்டுப்பூ மாலை அணிவதன் மூலம் மணிகளை மறுத்து மலரைத் தேர்ந்தெடுக்கிறாள். காந்தாரியின் கருப்புக் கண்கட்டு அவளே தன் வாழ்நாள் முழுக்கத் தேர்ந்தெடுத்த ஓர் ஆபரணம் ஆகும். இதில் தனி அணிகலன் மட்டுமே பெண் தன் விருப்பத்திற்கு ஏற்பத் தன் உடல் மீது தான் அதிகாரம் செலுத்தத் தொடங்கும் இடமாகும்.



படம் 2: அணிகலன்களின் மூவகைப்பாடும் அதிகார/விடுதலைப் பாதையும் (ஆய்வாளர் வடிவமைப்பு)

3. அடிமைத்தனமும், விடுதலையும்

செம்மணி, நீலமணி, வைரம், நவமணி என நூற்றெட்டு பொன்மணிகளால் ஆன அணிகள் அனைத்தும் வெண்முரசு நாவலில் வலம் வரும் அஸ்தினாபுர அரசிகளுக்குத் தரும் விலங்காகும். இவ்வணிகள் அனைத்தும் கனமானதால் அவர்களை ஓடிஆடி அசையவிடாத விலங்காக, அவர்களின் பொருளாதாரத்தையும் அதிகாரத்தையும் காட்ட அணிவிக்கப்படுகிறது.

| Copyright © Author(s)

முல்லை, அரளி, தெச்சி, முக்குற்றி, செந்தூரம், ஆவாரம், சிறுநீலம், கூவளம், பாரிஜாதம் போன்ற மலர் அணிகளை யாதவர் குல, நாகர் குல, காட்டு குலப் பெண்கள் என எளிய பெண்கள் அணிவதாகும். இவர்கள் செயற்கை அடிமைத்தனத்தை மறுத்து இயற்கையைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களுக்கு அணிகளின் மீது உள்ள விருப்பமும் சுதந்திரமும் அரச குலப் பெண்களுக்கு இல்லை என்ற நிதர்சனத்தை வெண்முரசு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

4. அணிகலன் – உடல் – அதிகாரம்

பெண்களுக்கு அணிவிக்கப்படும் பொற்சிலம்பும், மலர் மெட்டியும் அப்பெண்ணின் நடையை மேலும் மென்மையாக்குகிறது. இடை மற்றும் தொடையில் அணிவிக்கப்படும் அணிகள் காமத்தின் குறியீடாகின்றன. இடுப்பில் அணியும் மேகலையின் நடுவில் தொங்கும் ‘அனல்’ என்ற செம்மணி, பெண்ணின் யோனிக்கு நேராகத் தொங்குகிறது. இது பெண்ணின் இடையை, அல்குலை மறைப்பது போல மறைத்து, உண்மையில் அதை மேலும் எடுத்துக்காட்டுகிறது. காமத்தின் அணிகலனாக, ஆணின் பார்வையை நேராக அங்கே இழுக்கும் விலங்காகிறது. மேலும், தொடையில் அணியும் தொடைச்செறியானது பெண்ணின் உடலைத் துண்டு துண்டாகப் பிரித்து ரசிக்கும் ஆணின் பார்வையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஆண் அதிகாரம் பெண் உடலின் பாலியல் பகுதியை அணிகலன் மூலம் குறிவைக்கிறது.

மார்பில் அணியும் அடுக்கு மாலையானது யானைக்குப் போடும் படாம் போல, பெண்ணின் மார்பை மூடி அவளது மார்பு அவளுக்குச் சொந்தமில்லை என்பதையும், அவளுடைய மார்பு பொது சொத்து அல்ல, அது காவலுடன் கணவனுக்கு மட்டுமே சொந்தம் என்ற அதிகாரச் செய்தியை அறிவிக்கிறது. மேலும், மணமானப் பெண்ணின் கழுத்தில் அணியும் தாலி கணவனின் முத்திரையாகிறது. இவ்வணிகள் அனைத்தும் ஒரு பெண்ணை அலங்கரிக்கவில்லை; பெண் உடலை எப்படி ஆண் சமூகம் தன் காமத்திற்காகக் கட்டமைக்கிறது என்பதைக் காணமுடிகிறது. ஆனால், வெண்முரசின் திரௌபதி தனக்கெனக் கருநீல மணிமாலையும், இராதை பூமாலையும், காந்தாரி கண்கட்டு துணியையும் அணியும்போதுதான் அவர்கள் அடிமைத்தனத்தை உடைத்து விடுதலை அடைகிறார்கள்.

5. அணிசெய்தல்

அணிசெய்தல் என்பது வெறும் நகை பூட்டும் சடங்கு அல்ல, அது ஒரு வாழ்வின் உச்சக் கொண்டாட்டக் கணம் என்பதை பின்வரும் பெண்களின் ஏக்க வரி காட்டுகிறது:

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

இந்த நாளில் அணிசெய்வதைப் போல இனி எப்போது நிகழப்போகிறது? (ஜெயமோகன், முதற்கனல் 106)

அதாவது, போர் முடிந்து, காதல் கைகூடி, அரசு கிடைத்த அந்த ஒரு நாளில் பெண்களுக்கு அணிசெய்த அழகும், உள்ளத்தில் நிறைந்த பெருமிதமும் இனி ஒருபோதும் திரும்ப வராது.

பெண்களுக்கு அணிவிக்கப்படும் அணிகலன் என்பது தங்கமோ, முத்தோ அல்ல, அது ஒரு காலத்தில் மனம் மலர்ந்திருந்த, உள்ளம் பெருமிதத்தில் நிறைந்திருந்த ஒரு வரலாற்றுத் தருணத்தின் நினைவுச் சின்னமாகும். (ஜெயமோகன், விரிவும் 101)

எனவே, அணி என்பது வெறும் பொருள் அல்ல; அத்தருணம் தொலைந்த பிறகு அதே நகைகளை மீண்டும் அணிந்தாலும் அந்த மலர்ச்சி வருவதில்லை என்று வெண்முரசு நிறுவுகிறது.

6. அணிகலன் – ஆண்களின் ஆணவம்

வெண்முரசு அணியைப் பெண்ணின் பருவ நிலைகளோடு இணைக்கிறது:

அணிகளால் குழந்தை மலர்கிறது. கன்னியர் கனிகிறார்கள். அன்னையர் நிறைவுறுகிறார்கள். (ஜெயமோகன், எழுதழல் 544)

அதாவது, குழந்தைக்கு அணி பாதுகாப்பு, கன்னிக்கு அணி கனிந்து திருமணத்திற்குத் தயாரானதற்கானச் செய்தி, அன்னைக்கு அணி நிறைவின் அடையாளம். ஆனால், இதன் உச்சமாக,

அணிகள் அழகென மானுடன் அறிந்தவற்றின் நுண்செறிவு மற்றும் தெய்வங்களுக்கு முன் பணிந்து அவன் காட்டும் ஆணவம். (ஜெயமோகன், எழுதழல் 544)

என்பதன் மூலம், மனிதன் உலகில் கண்ட இயற்கை அழகுகளை எல்லாம் பொன்னால் சுருக்கிப் பெண் உடலில் பூட்டுவதன் மூலம் தன்னைப் படைப்பவனுக்கு நிகராகக் காட்டும் ஆணின் ஆணவமே அணிகலன் என்றும், அணி என்பது அழகு அல்ல, அது பெண் மீது செலுத்தப்படும் அடிமை விலங்கு என்றும் அறிவுறுத்துகிறது.

7. அணிகலன் – கூரிய ஆயுதக் குவியல்

காசி இளவரசிக்கு அரசியாக முடிசூட்டப்பட்ட அன்று அணிகலன் என்பது மனக்கிளர்ச்சியாக இருந்தாலும்,

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

> *ஆடையணிகளுக்குள் நுழையும்போது குருதி நுனிகள் மின்னும் கூரிய ஆயுதக் குவியலொன்றுக்குள் விழுவது போலவே உணர்ந்தாள்.* (ஜெயமோகன், முதற்கனல் 106)

அதாவது, அவளது உடலைக் குத்திக் கிழிக்கும் விலங்காக ஆடை அணிகலன் மாறுவதை வெண்முரசு காட்டுகிறது.

> *பண்டைய அரச மரபில் ஒரு பெண்ணுக்குப் பட்டாடை சூட்டி, முடி சூட்டி அவளை அலங்கரிப்பது அவளைப் பெருமைப்படுத்த அல்ல, பலிக்குத் தயார் செய்யும் பசுவைக் குளிப்பாட்டி, பூமாலை சூட்டி, மஞ்சள் பூசிக் கோவிலுக்கு இழுத்துச் செல்வது போன்றதே ஆகும்.* (மகாதேவன் 129)

அம்பை, அம்பிகை, அம்பாலிகை போன்ற காசி இளவரசிகளும் இதற்குச் சிறந்த சான்றாவார்கள். அதாவது, அரசப் பெண்ணுக்குத் தரப்படும் முடி, மாலை, பட்டாடை என்பது பெருமை அல்ல, அவளைப் பலியிடத் தயார் செய்யும் ஆயுதக் குவியலுக்குள் அவளைத் தள்ளுவதாகும் என்பதால், அணிகலன் என்பது அலங்காரம் அல்ல, அது பெண்ணின் உடல் மீது ஏவப்படும் கூரிய ஆயுதமாகும்.

8. அணிகலன் – ஒரு சுமை

வெண்முரசில் பெண்ணியத்தின் உச்சமாக,

> *பெண் என்று இவ்வணிகளை, இவ்வாடைகளை, இம்முலைகளை சுமந்துகொண்டிருக்கிறேன்.* (ஜெயமோகன், முதற்கனல் 106)

என்ற இந்த ஒற்றை வரி மூலம் அணிகள், ஆடைகள், முலைகள் மூன்றும் ஒரே தளத்தில் வைக்கப்படுகின்றன. அதாவது, முலை என்பது இயற்கை உறுப்பு, ஆடை என்பது சமூகம் கொடுத்த கட்டுப்பாடு, அணி என்பது அதிகாரம் மாட்டிய விலங்காகும். ஆனால், பெண் இந்த மூன்றையும் தன் உடலின் இயற்கைப் பகுதியாக அல்ல, பெண் என்பதற்காகச் சுமக்க வேண்டிய சுமையாகவே உணர்கிறாள்.

> *ஒரு ஆண்குழந்தைப் பிறந்தால் அதற்கு வாள் பரிசளிக்கப்படுகிறது. வாளை அவன் விரும்பினால் எடுக்கலாம், விரும்பாவிட்டால் வைக்கலாம். ஆனால் வளையலை அவள் மறுக்க முடியாது.* (பிரேமா ரேவதி 89)

| Copyright © Author(s)

ஏனெனில் அணிகலன் என்பது அழகு அல்ல, அது பெண் பிறப்பின் காரணமாகவே அவள் மீது திணிக்கப்படும் தவிர்க்க முடியாத சுமையாகும்.

9. அணிகலன் தன்னை அந்நியமாக்குதல்

முழு அலங்காரத்திற்குப் பிறகு கண்ணாடியில் தன் உருவத்தைக் காணும் அரசி தன்னை அடையாளம் காணாமல் திகைத்துப் பின் கசப்படைவதை பின்வரும் வரிகள் காட்டுகின்றன:

> *பட்டு நகைகளும் அணிந்து சுண்ணமும் செந்தூரமும் பூசி மலர்த்தடி அணி நிறைத்துப் பேராடியில் தெரிந்த உருவத்தைக் கண்டு அவள் திகைத்து மறுகணம் கசப்படைந்தாள்.* (ஜெயமோகன், பிரயாகை 332)

அதாவது, அணிகலங்களால் நிறைக்கப்பட்ட உருவம் அவள் அல்ல; அது ஆண் சமூகம் அவள் மீது பூசிய வெறும் ஒரு பெண். எனவே, கண்ணாடியில் தன்னை அடையாளம் காணாமல் திகைப்பதும், பின் கசப்படைவதும் அவள் தன் சுயத்தை இழந்து அந்நியமானதன் வெளிப்பாடே என்பதைக் காணலாம்

> *தன்னை அடையாளம் காணாமல் திகைப்பதும், பின் கசப்படைவதும் அவள் தன் சுயத்தை இழந்து அந்நியமானதன் வெளிப்பாடே.* (மாதவி 58)

இதன் மூலம் அணிகலன் என்பது பெண்ணை அழகாக்குவதில்லை, மாறாக அவளையே அவளுக்கு அந்நியமாக்குகிறது என்பதே உண்மையாகும்.

10. அணிகலனும் அருவருப்பும்

அணிகலன்களை அணியும்போது ஏற்படும் அருவருப்பை வெண்முரசு அரசியின் கூற்றின் வழியாகக் காணலாம்:

> *அணிபடும்போது இறந்த உடல் ஒன்றைத் தொட்ட கூச்சத்தை அவள் உடல் உணர்ந்து, அவற்றையெல்லாம் கழற்றி வீசிவிட்டு எளிய ஆடை ஒன்றை அணிந்தால் என்ன என்று எண்ணி, மறுகணமே அது ஆகக்கூடியதில்லை என அறிந்தாள்.* (ஜெயமோகன், முதற்கனல் 229)

பெண்ணாகவும் அரசியாகவும் இருப்பதற்கான இரட்டைத் தண்டனையாக,

> *பெண் என்ற அடையாளத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவள் இந்த அணி விலங்குகளைச் சுமந்தே ஆக வேண்டும். அதிலிருந்து தப்பிப்பது என்பது பெண் என்ற அடையாளத்திலிருந்தே தப்பிப்பது என்று பொருளாகும்.* (ராஜம் கிருஷ்ணன், விடுதலையும் 92)

பெண் என்ற அடையாளத்திற்குள் இருக்கும்வரை இந்த அணி விலங்கிலிருந்து தப்பிக்க இயலாது என்பதே அரச பெண்ணிற்கு விதிக்கப்பட்ட தண்டனையாகும்.

11. அணிகலன் – மலர்ச்சியின் சாட்சி

பெண் அணியும் நகை என்பது அவள் அழகைக் கூட்டுவதற்கானது அல்ல, அவள் மனம் தன் கணவனுக்காக மலர்ந்திருக்கிறது என்பதை ஊருக்கு அறிவிக்கும் சாட்சியம் என்பதைச் சத்யவதியின் வரிகள் தெளிவாக்குகின்றன:

> *நீ நகை அணிவது உன் அழகுக்காக அல்ல. உன் கணவனுக்காக உன் மனம் மலர்ந்திருக்கிறது என்பதைக் காட்டுவது அது.* (ஜெயமோகன், முதற்கனல் 229)

அதாவது, அணிகலன் என்பது பெண்ணின் சுயவிருப்பம் அல்ல;

> *கணவன் என்ற ஆண் மீதான விசுவாசத்தை, அவள் உடல் மூலம் பிறர் காணும்படி காட்ட வேண்டிய கட்டாய விளம்பரம். இது ஆண் சமூகம் பெண் உடலில் திணித்த கட்டுப்பாடு.* (ராஜம் கிருஷ்ணன், நோக்கில் 76)

எனவே, பெண் நகை அணியாவிட்டால் அவள் கணவனை நேசிக்கவில்லை என்று சமூகம் குற்றம் சாட்டும். இதன் மூலம் அணி என்பது அழகு சாதனம் அல்ல, கற்பின் சான்றிதழ் என்பதை உய்த்துணர முடிகிறது.

12. அணிகலன் – அரசியின் அதிகாரம்

எளிய பெண்ணிற்கு நகை என்பது அவள் விருப்பம் என்றால், அரசிக்கு அது விதி என்பதை பின்வரும் ஒற்றைக் கட்டளை தெளிவாக்குகிறது:

> *அரசி எப்போதும் அணியுடன் இருந்தாக வேண்டும்.* (ஜெயமோகன், முதற்கனல் 229)

இக்கட்டளையானது அரசி என்பவள் தனி மனிதி அல்ல, அவள் அரசின் செல்வத்தை, அரசனின் பெருமையைத் தன் உடலில் சுமந்து காட்டும் ஒரு காட்சிப் பொருள் என்பதைத் தெளிவாக்குகிறது.

> *எளிய பெண் நகையைத் தன் விருப்பப்படி அணியலாம், கழற்றலாம். ஆனால், அரசிக்கு அது விதி. அரசி எப்போதும் அலங்காரத்துடன் இருக்க வேண்டும் என்பது அரச தர்மம். அவள் அரசாங்கத்தின் சொத்து. அவள் உடல் அரசின் செல்வத்தைக் காட்சிப்படுத்தும் அருங்காட்சியமாக மாற்றப்படுகிறது.* (சிவத்தம்பி 116)

எனவே அவள் தூங்கும்போதும், துக்கத்தில் இருக்கும்போதும் கூட அணியைக் கழற்ற முடியாது. இதன் மூலம் அதிகாரத்தில் இருக்கும் பெண்ணுக்குக் கூட அணிகலன் என்பது அழகு அல்ல, அது அதிகாரத்தின் பெயரால் அவள் மீது பூட்டப்படும் நிரந்தர விலங்காகும்.

13. நிறைவுரை

வெண்முரசில் அணிகலன் என்பது அழகியல் சார்ந்த ஒரு பொருளாக மட்டும் கையாளப்படவில்லை. மாறாக, பெண்ணின் உடல் மீது சமூகம், குடும்பம், அரசு ஆகிய அதிகார அமைப்புகள் செலுத்தும் கட்டுப்பாட்டின் குறியீடாகவே கையாளப்பட்டுள்ளது என்பது இந்த ஆய்வின் வழி தெளிவாகிறது. கண்ணாடியில் தன் அலங்கரிக்கப்பட்ட உருவத்தைக் கண்டு திகைத்துக் கசப்படைவதும், அணிகலனை இறந்த உடலின் மீதான சுமையாக உணர்ந்து கூச்சமடைவதும், அவற்றைக் கழற்றிவிட நினைத்துத் தன் இயலாமையை உணர்வதும் பெண் தன்னைத் தானே அந்நியப்படுத்திக்கொள்ளும் நிலையைக் காட்டுகிறது. படங்கள் 1 மற்றும் 2 இல் காட்டப்பட்டவாறு, குல அணிகலனும் மங்கல அணிகலனும் அதிகார அமைப்புகளால் திணிக்கப்படும் நிலையில், தனி அணிகலன் மட்டுமே பெண்ணின் சுயத்தேர்வையும் விடுதலையையும் முன்வைக்கிறது. ஆகவே, வெண்முரசின் பெண்ணுலகில் அணிகலன் என்பது பொன்னாலான அலங்காரம் அல்ல; அது பெண் என்ற பாலின அடையாளத்திற்காக அவள் வாழ்நாள் முழுவதும் சுமக்க வேண்டிய கண்ணுக்குத் தெரியாத அடிமை விலங்கு என்று இந்த ஆய்வு முடிவு செய்கிறது.

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

குறிப்பு நூல்கள் (Works Cited — MLA)

[1.] கீதா, வ. *பெண், சாதி, அரசு – பண்டைய தமிழகம்*. அன்னம் பதிப்பகம், 2010.

[2.] சிவத்தம்பி, கா. *தமிழில் அரசும், அரச கருத்தியலும்*. தமிழ்ப் பல்கலைக்கழகம், 1994.

[3.] தமிழ்ச்செல்வி, சு. *பெண் உடலும் கருத்தியலும்*. பாரதி புத்தகாலயம், 2010.

[4.] தேவி, மீனா. *வெண்முரசில் பெண் மொழி*. பாரதி புத்தகாலயம், 2021.

[5.] பரமசிவன், தொ. *பண்பாட்டு அசைவுகள்*. நர்மதா பதிப்பகம், 1995.

[6.] பிரேமா ரேவதி. *மௌனத்தின் சாட்சியங்கள்*. கருப்பு பிரதிகள், 2017.

[7.] மகாதேவன், இரா. *பலி மரபும் தமிழ் பண்பாடும்*. மீனாட்சி புத்தக நிலையம், 2003.

[8.] மாதவி, சு. *பெண் உடல்; மொழியும் அதிகாரமும்*. உயிர்மை பதிப்பகம், 2012.

[9.] ராஜம் கிருஷ்ணன். *பெண் விடுதலையும் அடையாளமும்*. தாகம் பதிப்பகம், 2005.

[10.] ராஜம் கிருஷ்ணன். *பெண்ணிய நோக்கில் தமிழ் பண்பாடு*. தாகம் பதிப்பகம், 2002.

[11.] ஜெயமோகன். *வெண்முரசு – விரிவும், ஆழமும் (வாசிப்பு கட்டுரைகள் தொகுப்பு)*. விஷ்ணுபுரம் பதிப்பகம், 2017.

[12.] ஜெயமோகன். *வெண்முரசு (முதற்கனல், மழைப்பாடல், பிரயாகை, எழுதழல்)*. கிழக்குப் பதிப்பகம், 2015.

Works Cited — Romanized Transliteration (Secondary List)

[1.] Devi, Meena. *Venmurasil Penn Mozhi*. Bharathi Puthakalayam, 2021.

[2.] Geetha, V. *Penn, Saathi, Arasu – Pandaiya Tamizhagam*. Annam Pathippagam, 2010.

[3.] Jeyamohan. *Venmurasu (Mudharkanal, Mazhaippaadal, Pirayaagai, Ezhuthazhal)*. Kizhakku Pathippagam, 2015.

[4.] Jeyamohan. *Venmurasu – Virivum, Aazhamum*. Vishnupuram Pathippagam, 2017.

[5.] Maadhavi, S. *Penn Udal; Mozhiyum Athigaramum*. Uyirmai Pathippagam, 2012.

[6.] Mahadevan, R. *Pali Marabum Tamil Panpadum*. Meenakshi Puthaka Nilayam, 2003.

[7.] Parasivan, T. *Panpaattu Asaivugal*. Narmadha Pathippagam, 1995.

[8.] Prema Revathi. *Mounathin Saatchiyangal*. Karuppu Prathigal, 2017.

[9.] Rajam Krishnan. *Penn Viduthalaiyum Adaiyaalamum*. Thaagam Pathippagam, 2005.

[10.]Rajam Krishnan. *Penniya Nokkil Tamil Panpaadu*. Thaagam Pathippagam, 2002.

[11.]Sivathambi, K. *Tamilil Arasum, Arasa Karuththiyalum*. Tamil University, 1994.

[12.]Tamilselvi, S. *Penn Udalum Karuththiyalum*. Bharathi Puthakalayam, 2010.

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.31

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.

Tamilmanam